தடைகளை நீக்கும் தளகர்த்தர்

தடைகளை நீக்கிப் போடுகிறவர் அவர்களுக்கு முன்பாக நடந்து போகிறார். அவர்கள் தடைகளை நீக்கி, வாசலால் உட்பிரவேசித்துக் கடந்து போவார்கள். அவர்கள் ராஜா அவர்களுக்கு முன்பாகப் போவார் கர்த்தர் அவர்கள் முன்னணியில் நடந்து போவார் மீகா 2:13

தேவன் தடைகளை நீக்குகிறவர்; தடைகளைத் தாண்டிச் செல்ல தன் ஜனத்திற்கும் பெலனளிப்பவர். வேதத்தில் காணப்படும் இவ்வசனம் யாரிடத்தில் கடந்து வருகின்றது? எந்த நிலையில் கடந்து வருகின்றது? எவ்விதமான மக்களுக்கு தேவன் இந்த வசனத்தைக் கொடுக்கின்றார்? என்ற காரியங்களை நாம் புரிந்துகொள்வதற்கு முயற்சிப்போமானால், நாம் மீகா தீக்கதரிசன புத்தகத்தின் இரண்டாம் அதிகாரம் முழுவதையும் வாசிக்கவேண்டும். இந்த அதிகாரத்தில் காணப்படும் சிறிய கூட்டமாகிய மக்கள் இரண்டு விதமான காரியங்களினால் நெருக்கப்படுகின்றனர். முதலாவது கூட்டம் தேவனது வசத்திலிருக்கும் சிறிய கூட்டத்தை எப்போதும் அழுத்திக்கொண்டேயிருக்கும் பெரிய கூட்டத்தினர். இரண்டாவது கூட்டம் பொய்யான தீர்க்கதரிசனத்தின் மூலமாக மக்களை வஞ்சிக்கிற கூட்டத்தினர்.

தடைகளாய்த் தோன்றும் கூட்டம்

அக்கிரமத்தை யோசித்து, தங்கள் படுக்கைகளின்மேல் பொல்லாப்புச் செய்ய எத்தனம்பண்ணித் தங்கள் கையில் வல்லமை இருக்கிறபடியினால், விடியற்காலமாகிறபோது அதை நடப்பித்து, வயல்களை இச்சித்துப் பறித்துக் கொண்டு, வீடுகளை இச்சித்து எடுத்துக் கொண்டு, புருஷனையும் அவன் வீட்டையும், மனுஷனையும் அவன் சுதந்தரத்தையும் ஒடுக்குகிறவர்களுக்கு ஐயோ! ஆகையால் கர்த்தர்: நான் இந்த வம்சத்தாருக்கு விரோதமாய்த் தீமையை வருவிக்க நினைக்கிறேன். அதினின்று நீங்கள் கழுத்தை நீக்க மாட்டீர்கள். நீங்கள் மேட்டிமையாய் நடப்பதில்லை. அது தீமையான காலம். மீகா 2:1-3

தேவனுக்காகச் செயல்படும் சிறிய கூட்டம் ஒன்று இருக்கின்றது; அச் சிறிய கூட்டத்தை நோக்கியே "தடைகளை நீக்கிப் போடுகிறவர் அவர்களுக்கு முன்பாக நடந்து போகிறார். அவர்கள் தடைகளை நீக்கி, வாசலால் உட்பிரவேசித்துக் கடந்து போவார்கள். அவர்கள் ராஜா அவர்களுக்கு முன்பாகப் போவார் கர்த்தர் அவர்கள் முன்னணியில் நடந்து போவார்" என்று தேவன் சொல்லுகின்றார். தேவன் ராஜாவாக, நடத்துகிறவராக உங்களுக்கு முன்பாகச் செல்லுகிறார்; எனவே தைரியமாயிருங்கள், முன்னேறுங்கள் என்று தனது வார்த்தைகளினால் தேவன் அவர்களை உற்சாகமூட்டுகின்றார்.

சிறிய கூட்டத்திற்கு விரோதமாகச் செயல்படும் பெரிய கூட்டம் எப்படிப்பட்டது? வேத வசனத்தின் ஆதாரத்திலேயே அவர்களின் தீய குணங்களை நாம் அறிந்துகொள்ளலாம். மக்களுடைய கெட்ட எண்ணங்களையே எப்போதும் நினைத்துக்கொண்டிருப்பதுதான் இக்கூட்டத்தினருடைய பிரதான வேலை. தங்களுடைய படுக்கையிலும் கூட கெட்ட எண்ணங்களினாலேயே இவர்கள் நிரம்பியிருப்பார்கள்.

எவருடைய வயல்களை பறித்துக்கொள்ளலாம்? யாருடைய வீட்டை எடுத்துக்கொள்ளலாம்? யாருடைய மகளை எடுத்துக்கொள்ளலாம்? யாருடைய சொத்துக்களை கொள்ளையடிக்கலாம்? என்று அவர்கள் யோசிப்பது மட்டுமல்ல அத் தீய செயல்களைச் செய்யவும் முனைந்து இக்கூட்டத்தினர் முனைந்து நிற்கின்றனர். அவர்களின் பலம் கூடியிருப்பதினால் தொடர்ச்சியாக தீமையான காரியங்களைச் செய்வதையே தங்கள் வாழ்க்கையின் வழக்கமாக்கிக்கொண்டவர்கள். தேவ ஜனமாகிய இச்சிறிய கூட்டம் தேவனுக்காகக் காத்திருக்கிறது; ஆனால், ஒரு பெரிய கூட்டமோ தவறான சிந்தையுடையதாக தீமையானவைகளையே யோசித்துக்கொண்டிருக்கிறது.

இவ்வதிகாரத்தில் மக்களிடையே பொய்யாய்த் தீர்க்கதரிசனம் சொல்லுகின்ற மற்றுமோர் கூட்டத்தினரையும் நாம் காண இயலும்; அதுவும் தேவனுக்கு விரோமான கூட்டமே. ஒன்றுமில்லாத நேரத்திலே 'சமாதானம்' என்று சொல்லி மேற்பூச்சாய் பேசுகின்றக் கூட்டம்.

இப்படிப்பட்ட இரண்டுவிதமான கூட்டத்தினரின் மத்தியிலேயே தேவ ஜனமாகிய சிறிய கூட்டம் அழுத்தப்படுகின்றது. அனுபவத்தில் நடப்பது ஒன்று ஆனால், வசனத்திலோ இன்னொரு காரியம் காணப்படுகின்றது. இதினிமித்தமாக அந்த சிறிய கூட்டம் கலங்கிப்போயிருந்ததுடன், பயத்தோடும் நடுக்கத்தோடும் காணப்பட்டனர். இப்படிப்பட்ட நிலையிலுள்ள சிறு கூட்டத்தினரைப் பார்த்தே தேவன் **"தடைகளை நீக்கிப்போடுகிறவர் உங்களுக்கு முன்பாகக் கடந்துபோகிறார்"** என்று சொல்லுகின்றார். நாம் எப்படிப்பட்ட மக்கள் கூட்டத்தினரால் இவ்வுலகத்தில் நெருக்கப்பட்டாலும், அழுத்தப்பட்டாலும், தீமையான எண்ணமுடைய கூட்டத்தினரால் சூழப்பட்டாலும், தேவன் நமக்கு முன் செல்வாரென்றால் அவரைப்போல நாமும் தடைகளைக் கடந்து செல்லமுடியும்.

தடைகளை தகர்க்கும் தேவன்

> **எழுந்திருந்து போங்கள். இது நீங்கள் இளைப்பாறும் இடம் அல்ல. இது தீட்டுப்பட்டது. இது உங்களை நாசப்படுத்தும். அந்த நாசம் மிகவும் கொடியதாயிருக்கும். மீகா 2:10**

இந்த காரியத்தை ஜனங்கள் கேட்டபோது அவர்கள் கலக்கமடைந்துவிட்டார்கள். அழுத்தப்படுகின்ற ஒரு கூட்டம், நான்கு புறமும் பொய்யான தீர்க்கதரிசனத்தைக் கேட்கிற கூட்டம், கெட்ட காரியங்களைக் காண்கிற கூட்டம். இதன் மத்தியில் தேவன் தமக்குக் காத்திருக்கிற கூட்டத்தைப் பார்த்து **"நீ எழுந்து போ, இது நீ இளைப்பாறுகிற இடம் அல்ல"** என்று சொல்லுகின்றார். அப்போது தேவனின் வார்த்தைகளைக் கேட்டு அந்த கூட்டம் முன்னேறிச் செல்கிறது.

நமது அன்றாட ஆவிக்குரிய வாழ்க்கையின் ஓட்டத்தில் நாம் எப்படி முன்னேறிச் செல்வோம்? ஊழியத்தில் எப்படி முன்னேறிச் செல்வோம்? வாழக்கையில எப்படி முன்னேறிச் செல்வோம்? நான்கு புறங்களிலும் தடைகள் காணப்படும்போது முன்னேறிச் செல்வது எப்படி? என்ற சிந்தனை நம்மை ஆட்கொள்ளும் நேரத்திலேயே, தேவன் நம்மை நோக்கி "நான் முன்னே செல்லுகின்றேன்" என்று சொல்லுகின்றார். தேவன் நமக்கு முன்னே செல்லுவாரென்றால், அவர் எப்படி தடைகளைத் தகற்கும் தளகர்த்தராக முன்னேறிச் செல்லுகின்றாரோ அப்படியே நாமும் தடைகளைத் தகர்த்து முன்னேற முடியும். இராஜாவாக, தலைவனாக, நடத்துகிறவனாக தேவன் நமக்கு முன்னே சென்றுகொண்டிருக்கின்றார். தேவன் நெருக்கப்படும் தனது ஜனத்தை நோக்கி, "நான்

உனக்கு முன்பாக இருந்த தடைகளை நீக்கிப்போடவில்லையா?" என்று அவர்களுக்காகச் தான் செய்த காரியங்களையும் அவர்களுக்கு ஞாபகமூட்டவும் விரும்புகின்றார்.

அடிமைகளாகப் பாவிக்கப்பட்ட தன் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு முன்பாக இருந்த மூன்று தடைகளை தேவன் முறித்துப்போட்டார். இஸ்ரவேல் மக்கள் எகிப்து தேசத்தில் அடிமைகளாக இருந்தபோது அவர்களால் பெருமூச்சு மட்டுமே விடமுடிந்தது; வேறொன்றும் அவர்களால் செய்யமுடியவில்லை. அவர்களுக்குத் தங்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்துக்கொள்ள வழியொன்றும் தோன்றவில்லை. அச்சமயத்தில், பார்வோனையும், அவனுடைய சேனைகளையும், அவனுடைய மக்களையும் தேவன் அடித்ததினிமித்தம் தேவன் அவர்கள் தடைகளை உடைத்துப்போட்டார்.

இஸ்ரவேல் மக்களுக்கு எதிர்பார்ப்பு ஒன்றுமில்லை, எகிப்திலிருந்து தாங்கள் விடுதலையாவோம் என்று அவர்கள் நினைத்துப் பார்க்கவும் இல்லை. தேவன் பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்திக்கொண்டேயிருந்தபோது, அவர்கள் கலக்கமடைந்துகொண்டேயிருந்தார்கள். ஆனால், தேவனது வேளை வந்தபோது தேவன் இஸ்ரவேல் ஜனங்களின் கட்டுகளை உடைத்துப்போட்டார்.

சிவந்த சமுத்திரத்தினண்டை அவர்கள் வந்தபோது, 'நமக்கு விடுதலை கிடைத்துவிட்டது, ஆனால், முழுவதும் கிடைக்கவில்லை' என்றே இஸ்ரவேல் மக்கள் நினைத்துக்ககொண்டிருந்தார்கள்; ஏனெனில், அப்போதும் பார்வோன் அவர்களைப் பின்தொடர்ந்து வந்துகொண்டிருந்தான். அந்த நேரத்தில் அவர்கள் புலம்பியபோது, செங்கடலிலும் தேவன் அவர்களுக்கு வழியை உண்டாக்கினார். நான் உங்களை நடத்துகின்ற தேவன்; நான் உங்களுக்கு வழி காட்டுகிறவர்; என்பதை அவர்களுக்கு தனது ஆச்சரியமான செயல்களின் வாயிலாக தேவன் வெளிக்காட்டிக்கொண்டே வந்தார். எங்கே எதிர்பார்ப்பு இல்லையோ, வசதிகள் இல்லையோ, ஒன்றும் தென்படவில்லையோ அங்கே தேவன் கிரியை செய்கின்றார் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. தன் ஜனத்திற்காகக் கடலில் வழியை உண்டாக்குவதற்கு தேவனுக்கு ஒரே ஒரு இரவு போதுமானதாயிருந்தது.

வனாந்தரத்தில் தேவன் அவர்களை அழைத்துவந்தபோது, அவர்களை அருமையாக நடத்திவந்தார். எனினும், அவர்கள் வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்குச் சென்றடைவதற்கு யோர்தான் அவர்களுக்குத் தடையாகக் காணப்பட்டது. அந்நேரத்திலும் தேவன் தன் ஜனத்திற்காகச் செயல்பட்டார். தேவனது சொற்படி அவர்கள் தங்கள் கால்களைத் தண்ணீரில் வைத்தபோது, அது இரண்டாகப் பிளந்தது.

இயேசுவை நாம் ஏற்றுக்கொண்டபடியினால், நமக்குப் பாவத்திலிருந்து விடுதலை கிடைத்திருக்கிறது; அத்துடன் நாம் ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினால் இணைக்கப்பட்டிருக்கிறோம். இஸ்ரவேல் ஜனங்கள் எவ்விதமாய் மரணத்தின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டார்களோ அவ்விதமாக நாமும் பாவத்தின் பிடியிலிருந்து இயேசுவின் இரத்தத்தினாலும், சுவிசேஷத்தினாலும் விடுவிக்கப்பட்டிருக்கின்றோம். ஆனால், நமக்கு முன்பாக எழுகின்ற தடைகள் நம்மை அழுத்திக்கொண்டேயிருக்கின்றது. பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டோர் அநேகருண்டு, ஆனால், இன்னும் அவர்களில் அநேகர் தங்களது ஆவிக்குரிய வாழ்க்கையில் முன்னேற முடியாமலிருக்கின்றனர். பின்னேயிருந்து அழுத்தம், முன்னேயோ முன்னேற முடியாதபடி தடை; இவ்விதமான இக்கட்டான சூழ்நிலையில் நாம் காணப்படும்போது, தேவன் நம்மை நோக்கி, **"நான் உங்கள் முன்னே செல்லுகின்றேன்"** என்று சொல்லுகின்றார். ஒரு சிலர் முன்னேறிச் செல்வதற்காகத் தங்களை அர்ப்பணித்திருக்கிறார்கள்; பாவத்திலிருந்து விடுதலையடைந்திருக்கிறார்கள், தொடர்ந்து முன்னேறிச் சென்று மன்னாவையும் சாப்பிட்டார்கள், ஜீவத் தண்ணீரையும் குடித்தார்கள்; ஆனால், ஆண்டவர் சொன்ன வாக்குத்தத்தமோ இன்னமும் நிறைவேறவில்லை.

வாக்குத்தத்தத்தைத் தடுப்பதற்காக யோர்தான் நதி முன்னே இருக்கிறது. இன்றும், ஆவிக்குரிய வாழ்வில் வாக்குத்தத்தம் பெற்ற அநேககர் எதிரிட்டு நிற்கும் யோர்தானாகிய தடையைக் கண்டு கலக்கமடைந்து முன்னேற இயலாமல் அங்கேயே நின்றுவிட்டார்கள்.

தடையான வஸ்திரம்

> அவர் பிரதான ஆசாரியனாகிய யோசுவாவை எனக்குக் காண்பித்தார். அவன் கர்த்தருடைய தூதனுக்கு முன்பாக நின்றான். சாத்தான் அவனுக்கு விரோதஞ் செய்ய அவன் வலது பக்கத்திலே நின்றான். அப்பொழுது கர்த்தர் சாத்தானை நோக்கி: கர்த்தர் உன்னைக் கடிந்து கொள்வாராக. சாத்தானே, எருசலேமைத் தெரிந்துகொண்ட கர்த்தர் உன்னைக் கடிந்து கொள்வாராக. இவன் அக்கினியினின்று தப்புவிக்கப்பட்ட கொள்ளியல்லவா என்றார். யோசுவாவோவெனில் அழுக்கு வஸ்திரம் தரித்தவனாய்த் தூதனுக்கு முன்பாக நின்றிருந்தான். சகரியா 3:1-3

பிரதான ஆசாரியனாகிய யோசுவா பாபிலோனின் கட்டுகளிலிருந்து விடுபட்டு வந்தவன். தேவனால் அழைக்கப்பட்ட பிரதான ஆசாரியனான, தேவனுடைய ஆலயத்தைக் கட்டுவதற்காக வந்த யோசுவா, பாபிலோனிலிருந்து விடுதலையானவன், அதிகாரம் உடையவன், ஆசீர்வதிக்கப்பட்டவன். ஆனால், ஏன் சாத்தான் அவன் வலது பக்கமாக அவனுக்கு நாசம் உண்டாக்குவதற்காக நிற்கிறான்? யோசுவா அழுக்கு வஸ்திரம் தரித்திருந்தான். எனவே, மீகா தீர்க்கதரிசியின் புத்தகத்தில், **நீ எழுந்திரு, நீ இருக்கிற இடம் அசுத்தமானது, நீ கடந்து போ, நான் உனக்கு முன்னே செல்லுவேன்** என்றார். நமக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தை அடைவதற்கான நிலைமையில் நாம் இருக்கிறோமா? நாம் வாக்குத்தத்தத்தைப் பெற்றிருப்போமாகில் தேவன் நம்மைப் பார்த்து, “நான் தடைகளை நீக்கிப்போடுகிறவராக முன்னே செல்லுகிறவர், நீ எனக்குப் பின்னாக வா” என்றே கூறுகிறவராகக் காணப்படுகின்றார். தேவ ஜனத்திற்கு விரோதமாகக் கிரியை செய்வதற்கு சத்துரு எப்போதும் ஆயத்தமாக நின்றுகொண்டேயிருக்கின்றான். ஆனாலும், கூட தேவன் நமது கரத்தைப் பிடித்து வாக்குக் கொடுக்கின்றார். ஒரு கூட்டம் விடுதலையடைந்திருந்தார்கள்; ஆனால், அழுக்கு வஸ்திரம் தரித்திருந்தார்கள்.

இரண்டாவது கூட்டம் சந்தேகத்தோடு நிற்கிறவர்கள். சந்தேகம் தடைகளைத் தாண்டமுடியாதபடி அவர்களை நிறுத்திவிட்டது. ஸ்திரிகள் வந்து பயத்தோடும், நடுக்கத்தோடும் கல்லறைக்கு முன்பாக நின்றுகொண்டிருந்தார்கள். அவர்கள் வந்து பார்த்தபோது கல்லறையின் கல் நீக்கப்பட்டிருந்தது. இயேசுவின் வஸ்திரம் வைக்கப்பட்டிருந்தது. அப்போது தேவதூதன் ‘அவர் இங்கே இல்லை, தாம் சொன்னபடி உயிர்த்தெழுந்தார்’ என்று அவர்களுக்கு அறிவித்தான். மரியாள் தேவன் மீது அன்பு வைத்திருந்தாள் ஆனால், அதை தனதாக்கிக்கொள்ள அவளால் இயலவில்லை, தேவன் அவளுக்கு தரிசனமளிக்கவேண்டிய அவசியம் காணப்பட்டது.

தடைகளாய்க் காட்சியளிக்கும் கூட்டத்தினரைக் கண்டோ, தடைகளாய்க் காணப்படும் காரியங்களைக் கண்டோ நாம் தளர்ந்துவிடாமல், தளகர்த்தரின் பின்னே தொடர்ந்து செல்வோமாகில் நம்மாலும் இவ்வுலகில் சத்துருவின் தடைகளைத் தகர்த்து தேவனுக்கென்றும், தேவ ராஜ்யத்திற்கென்றும் வெற்றிக்கொடி ஏற்றமுடியும்; தடைகளையும் தாண்டிச் சென்று அழியும் ஆத்துமாக்களை அவரண்டைக்குக் கொண்டுவர முடியும். சத்துருவின் தடைகளைத் தகர்க்க நமது அழுக்கு வஸ்திரங்கள் நம்மைத்

தடைச்செயதுவிடாதபடி, பரிசுத்தமானதோர் வாழ்க்கையுடன் இவ்வுலகில் சத்துருவுக்கு விரோதமாய் போர் புரிவோம். விண்ணுக்காய் யுத்தம் செய்யும் நாம் தடைகளைக் கண்டு பின்னுக்குத் திரும்பிவிடக்கூடாதே. வாக்குத்தத்தங்களுக்கு விரோதமாய் எதிர்த்துவரும் தடைகளை வசனத்தின் வாளால் வெற்றிகொள்வோம். ஆத்தும அறுவடைப் பணிக்கு முன்பாகவும், பணியாளர்களுக்கு முன்பாகவும், பணித்தளங்களுக்கு விரோதமாகவும் சத்துரு கொண்டுவரும் தடைகளைத் தகர்க்கும் வலுவுடையோராய் நாம் மாறுவோம்.